தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்
மக்கள் தொடர்பு அலுவலகம்
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் ஜெ. வெங்கட் பிரபு Ph.D.,
பேராசிரியர் (வேளாண் விரிவாக்கம்)
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 23-6-2014

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

## ஜூன் முதல் ஆகஸ்டு மாதங்களில் அறுவடையாகும் மரவள்ளிக்கிழங்கிற்கு நல்ல விலை கிடைக்கும்

2012-13ல் உலகளவில் 262 மில்லியன் டன்கள் மரவள்ளிக்கிழங்கு உற்பத்தி செய்யப்பட்டது. மரவள்ளிக்கிழங்கு உற்பத்தியில் ஆப்பிரிக்காவில் உள்ள நைஜீரியா நாடு முதலிடத்தில் உள்ளது. எனினும், ஐக்கிய நாடுகள் சபையின் உணவு மற்றும் விவசாய அமைப்பின் புள்ளி விவரங்களின்படி, தாய்லாந்து நாடானது மரவள்ளிக்கிழங்கு ஏற்றமதியில் தொடர்ந்து முதலிடத்தில் உள்ளது. உலகளவில் 75 சதவீத ஏற்றுமதியை இந்நாடு கொண்டுள்ளது. இதற்கு அடுத்தபடியாக வியட்நாம், இந்தோனேசியா மற்றும் கோஸ்டா ரிக்கா போன்ற நாடுகள் உள்ளன.

இந்தியாவில், மரவள்ளிக்கிழங்கு சாகுபடி பரப்பளவு 2.06 இலட்சம் எக்டர் ஆகவும், மொத்த உற்பத்தி 7.24 மில்லியன் டன்களாகவும் உள்ளது. இக்கிழங்கானது தமிழ்நாடு (54.97%) மற்றும் கேரளா (33.62%) பகுதிகளில் அதிகமாக பயிரிடப்படுகிறது. மேலும், நாகலாந்து (2.90%), மேகாலயா (2.71%), ஆந்திரபிரதேசம் (2.65%) மற்றும் அசாம் (2.16%) போன்ற இந்தியாவின் பிற மாநிலங்களிலும் பயிரிடப்படுகின்றது. இந்தியாவின் மரவள்ளிக்கிழங்கு ஏற்றுமதியின் மதிப்பானது, 2012-13-ல் 490 மில்லியனாக இருந்தது. இதில், 109 மில்லியன் மதிப்புள்ள கிழங்கினை சவுதி அரேபியாவும், 100 மில்லியன் மதிப்புள்ள கிழங்கினை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் மற்றும் ஓமன் ( 52 மில்லியன்) நாடுகளும் இறக்குமதி செய்தன. மரவள்ளிக்கிழங்கின், 85 சதவீத ஏற்றுமதி கொச்சின் துறைமுகத்தின வாயிலாகவும் அடுத்தபடியாக சென்னை (3.7%) மற்றும் தூத்துக்குடி (3.4%) துறைமுகங்கள் வாயிலாகவும செய்யப்படுகிறது. மேலும் தாய்லாந்திலிருந்து இறக்குமதி செய்யப்படும் மரவள்ளிக்கிழங்கு 2011-12இல் 322 மெட்ரிக் டன்னாக இருந்து 2012-13இல் 190 மெட்ரிக் டன்னாக குறைந்துள்ளது.

தமிழ்நாட்டில் இக்கிழங்கின் மொத்த சாகுபடி பரப்பளவு 2012-13-ல் 1.57 இலட்சம் எக்டர் ஆக இருந்தது. இதில், நாமக்கல் (25.66%), தருமபுரி (17.13%), சேலம் (16.22%), விழுப்புரம் (11.64%) மற்றும் ஈரோடு (5.59%) ஆகியன மரவள்ளிக்கிழங்கு பயிரிடும் முக்கிய மாவட்டங்களாகும். மேற்கூறிய மாவட்டங்கள் தமிழ்நாட்டின் மொத்த மரவள்ளிக்கிழங்கின் சாகுபடி பரப்பளவில் 76 சதவீத பரப்பளவை கொண்டுள்ளன. மேலும், இக்கிழங்கின் சாகுபடி,

திருச்சிராப்பள்ளி (5.67%), கடலூர் (3.23%), கன்னியாகுமரி (2.57%), கரூர் (2.24%) மற்றும் திருவண்ணாமலை (2.24%) போன்ற மாவட்டங்களிலும் பயிர் செய்யப்படுகிறது.

மரவள்ளிக்கிழங்கின் வரத்தானது தொழிற்சாலைகளுக்கு, ஜூலை முதல் ஏப்ரல் மாதம் வரை கிடைக்கப் பெறுகின்றது. குறிப்பாக நவம்பர் மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரை வரத்து அதிகரித்து காணப்படுகிறது. ஏனெனில், இம்மாதங்களில் நிலவும் குளிரானது, அதிகளவு மாவுசத்து ஒருங்கிணைப்புக்கு பயன்படுவதால் கிழங்குகளில், மாவுசத்து அதிகரிக்க ஏதுவாகும். கொல்லிமலை மற்றும் பச்சமலை போன்ற பகுதிகளிலிருந்து வரத்தானது, ஜூன் மாதக் கடைசியிலிருந்து, ஆகஸ்ட் மாதம் வரை கிடைக்கப்பெறுகின்றது. மேலும், கருமாந்துறையிலிருந்து ஆகஸ்ட் முதல் செப்டம்பர் வரையிலும், சேலம், நாமக்கல், அரூர், தருமபுரி மற்றும் ஈரோடு போன்ற பகுதிகளிலிருந்து நவம்பர் முதல் மார்ச் வரையிலும் கிழங்குகள் கிடைக்கப்பெறுகின்றன.

மரவள்ளிக்கிழங்கு அனைத்து காலநிலைகளுக்கும் ஏற்ற பயிராக உள்ளதால் விவசாயிகள் இதை ஒரு பாதுகாப்பான பயிராக கருதுகிறார்கள். மேலும், இக்கிழங்கானது நல்ல வருமானத்தை ஈட்டி தரும் பயிராக உள்ளது. ஒரு வருடத்தில், ஏறக்குறைய இரண்டு மடங்கு அளவு, விலை உயர்ந்துள்ளது. இதனால், 2013-14-ல் மரவள்ளிக்கிழங்கின் பரப்பளவு மற்றும் உற்பத்தி நிலையாக இருந்து வருகிறது.

இந்த சூழ்நிலையில், தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தில் இயங்கும் வேளாண் விற்பனைத் தகவல் மற்றும் வணிக ஊக்குவிப்பு மையத்தின் பின்புல அலுவலகம், கடந்த 14 வருடங்களாக மரவள்ளிக்கிழங்கு அதிகமாக பயிரிடப்படும் சேலம் மற்றும் அதனை சுற்றியுள்ள சமவெளி பகுதிகளில் விளைந்த கிழங்கிற்கு, சேலம் மொத்தச்சந்தைகளில் நிலவிய 14 வருட விலைப்பற்றிய ஆய்வு மேற்கொண்டது. மரவள்ளிக்கிழங்கு அறுவடையானது ஜூன் மாதம் முதல் ஆகஸ்டு மாதம் வரை கொல்லிமலை மற்றும் பச்சமலை பகுதிகளில் நடைபெறுகின்றது. தற்போது, மரவள்ளிக் கிழங்கின் (மாவுசத்து 25 சதவீதம்) விலையானது கிலோ ஒன்றிற்க்கு ரூ.10 முதல் 12 வரை உள்ளது. அதன்படி, வருகின்ற ஜூன்-ஆகஸ்டு மாதங்களில் அறுவடையாகி வருகின்ற மரவள்ளிக்கிழங்கிற்கு விவசாயிகளுக்கு, கிலோவிற்கு ரூ.12 முதல் ரூ.13 வரை கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. எனவே விவசாயிகள் அறுவடை செய்த மரவள்ளிக்கிழங்கினை விற்குமாறு பரிந்துரைக்கப்படுகிறது.

<u>மேலும் விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

உள்நாட்டு மற்றும் ஏற்றுமதி சந்தைத் தகவல் மையம்,
வேளாண் மற்றும் ஊரக மேம்பாட்டு ஆய்வு மையம்,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி – 0422-2431405

<u>மேலும் தொழில் நுட்ப விவரங்களுக்கு தொடர்பு கொள்ளவும்</u>:-

பேராசிரியர் மற்றும் தலைவர்,
காய்கறிப் பயிர்கள் துறை,
தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்,
கோயம்புத்தூர் - 641 003.
தொலைபேசி – 0422-6611374 / 6611283.

மக்கள் தொடர்பு அலுவலர்